ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

विद्या विवादाय धनं मदाय शक्तिः परा लोकनिपीडनाय ।
खलस्य साधोर्विपरीतमेतद् ज्ञानाय दानाय च रक्षणाय ॥

துஷ்டர்களிடத்து வித்தை யிருப்பின், அது கலகத்தின் பொருட்டும், பொருளிருந்தால் அது மதத்தைக் கொடுப்பதிலும், சரீரபல மிருக்குமாகில், அது பிறரை உபத்திரவிப்பதிலும், உபயோகப்படுகின்றது. இம் மூன்றும் ஸாதுக்களிடமிருப்பின், அவர்கள் ஞானம், ஈகை, ரக்ஷணம் இந் நல்வழிகளில் அவற்றை முறையே விநியோகிக்கின்றார்கள்.

இவ் வுலகிலும் மேலுலகிலும் விசேஷமான பெருமையை அடையவேண்டி, அதற்குற்ற சாதனங்களை விரும்புவது ஜனங்களுக்கு இயற்கையே. இவ்விதம் அவரவர்களின் கோரிக்கைப்படி எல்லா ஜனங்களுக்கும் கிடைக்காவிடினும், சிலருக்காவது அவ்வித பாக்கியம் நேரக்கூடும். அப்படி நேரும் ஸாதனங்களுள், கல்விச்செல்வம், பொருட்செல்வம், தேகவலிமை இம் மூன்று செல்வங்களையும் ஒருங்கேயடைந்த ஒருவன், இச் சாதனங்களைக்கொண்டு, தான் அடையவேண்டியது யாதெனச் சற்று கவனித்தல் வேண்டும். கல்வியால் முக்கியமாய் அடையவேண்டுவது ஞானப்பெறுக்கேயாம். இரண்டாவதான பொருட்செல்வத்தைப்பற்றி ஆலோசிக்குமிடத்து, அஃது தன் சரீரரக்ஷணத்திற்கு உபயோகித்துக்கொள்வது, பிறருக்குக் கொடுப்பது என்ற இவ் விரண்டு வழிகளைத்தவிர, வேறுவிதம் காணப்படவில்லை யாகையால், தன் உபயோகத்திற்கு அவசியமானது போக, மிஞ்சியதை நற்கருமங்களில் விநியோகித்தல் நலமாகும். இனி இறுதியிற் கூறப்பட்டுள்ள சரீரவலிமையின் முக்கிய பிரயோஜனம், அதனால் பிறருக்கு உதவிபுரிந்து ரக்ஷித்தலேயாகும். இக்கருத்துகொண்டே "परोपकारार्थमिदं शरीरं" என அறிஞர்கள் கூறியிருக்கின்றனர். இவ்விதமின்றி, வித்தையாலும் செல்வப்பெருக்காலும் மதத்தையடைந்து விவேகம் குன்றி தீயகருமங்களைச் செய்வது, துஷ்டர்களுடைய நடத்தை யாகையால், அதை விலக்கி ஸாதுக்களின் கொள்கைகளையே நாம் எப்பொழுதும் அனுஷ்டிக்கவேண்டும்.

ஆர்ய தர்மம்.

ருதிரோத்காரி-ஹூ மார்கழி-மீ ௵

சரணமடைந்தோரைப் பாதுகாப்பதே

சிறந்த தர்மம்.

பிறகு நம்மைச்சரணமடைந்த வேோர் அதிதிக்கு ஆபத்துக் காலத்தில் அன்னமளித்துப் பசிப் பிணியினுல் அவனுக்கேற்பட்டிருக்கும் கஷ்டத்தை விலக்கமுடியாமல், அவர் வருந்துவதைப் பார்த்திருக்கும்படியாக எத்தகைய தீவினை முற்பிறவியில் இழைத்திருக்கிறேமோ புலப்படவில்லையே. ஐயோ! இந்த உபகாரங்கூட செய்வதற் கருகமற்ற இந்த ஜன்மாவை யடைந்து, ஜீவிக்கவும் வேண்டுமா? பரோபகாரத்திற்குச் சற்றும் அருகமில்லாத இப்பயனற்ற சிருஷ்டியை ஸர்வக்ஞனை பகவான் யாது காரணம்பற்றிச் செய்தாரோ தெரியவில்லையே. எவ்விதத்தாலும் இம் மஹானின் பசியைத் தீர்க்கவேண்டியது நமது கடமை. இத் தர்மத்திற்கு உபயோகப்படாத நம சரீரத்தைக் காப்பற்றி என்னசுகத்தை நாம்அடையப்போகிறேம். இன்றே நாளையதினமோ, அல்லது சிறிதுகாலஞ் சென்ற பின்போ, நமது விருப்பத்தை யெதிர்பாராமல் இச் சரீரம் நாசத்தை யடையப்போவது நிச்சயம். அவ்வித மு'பயோகமில்லாமல் போகும் இதைச் சரணமடைந்த ஒருவரை ரக்ஷிப்பதென்கிற தர்ம காரியத்தில் உபயோகப்படுத்தினுல், விசேஷமான சிரேயஸ்ஸை யடையலாமே என்று ஆலோசித்து, நம்சரீரத்திலிருக்கும் மாம்ஸத்தைக் கொடுத்தாவது, இவரது பசியைத் தீர்க்க வேண்டுமென்கிற உறுதியான எண்ணத்துடன் அவ் வேடனைப் பார்த்து

उवाच तर्पयिष्ये त्वां मुहूर्तं प्रतिपालय ।
इत्युक्त्वा शुष्कपर्णैस्तु समुज्वाल्य हुताशनम् ॥
हर्षेण महताविष्टः कपोतः पुनरब्रवीत् ।
ऋषीणां देवतानां च पितॄणां च महात्मनाम् ॥
श्रुतः पूर्वं मया धर्मो महानातिथिपूजने ।
कुरुष्वानुग्रहं सौम्य सत्यमेतद्ब्रवीमि ते ॥
निश्चिता खलु मे बुद्धिरतिथिप्रातिपूजने ।
ततः कृतः प्रतिज्ञो वै स पक्षी प्रहसन्निव ।
तमग्निं त्रिः परिक्रम्य प्रविवेश महामतिः ॥

நான் உன் பசியை நிவர்த்தித்து திருப்தி செய்கிறேன். ஒரு முகூர்த்தம் தயவுசெய்து பொறுத்தருளவேண்டும் என்று கூறி அங்கிருந்த காய்ந்த சருகுகளால் அக்னியை நன்றாய் விருத்தி செய்துவிட்டுப் பின்வருமாறு உரைத்தது நான் முன்னொரு சமயம் ரிஷிகள், தேவர்கள், பிதுர்க்கள் மற்றும் சிலமஹான்கள் முதலானவர்களிடமிருந்து அதிதிகளைப் பூஜிப்பதே சிறந்த தர்மமென்று கேள்வியுற்றுள்ளேன். ஆகையால் எவ்விதத்தாலேனும், தங்களை ஆராதித்து இந்த உத்தம தர்மத்தை யடையவேண்டுமென்கிற பிரதிக்ஞையுட னிருக்கிறேன். இது ஸத்யம். இதுவே எனது உண்மையான அபிப்பிராயம். தாங்கள் அனுக்கிரகம் செய்யவேண்டும் என்று தெரிவித்து மிகுந்த சந்தோஷத்துடன் அங்கு விளங்கும் அக்னிபகவானை மும்முறை வலம்வந்து, பிரார்த்தித்துக்கொண்டு அதில் விழுந்துவிட்டது. இவ்விதம் தன்னிடம் சொல்லிவிட்டு, அக்னி மத்தியில் விழுந்த அப் புறாவைக் கண்ணுற்ற வேடன், எப்பொழுதும் பிறரால் நிந்திக்கக்கூடிய கெட்ட கர்மாவைச் செய்யும் எனக்கு, தற்காலம் மிகவும் கொடியதான பாபமும் நேர்ந்துவிட்டது. தர்ம சிந்தை யுள்ளதும், ஆஸ்திக புத்தியுடன் கூடியதுமான இப் புறா என் பொருட்டல்லவா தீயில் விழுந்து மாண்டது, என்று மிக

வும் வியசனித்து, புறுவின் நடத்தையால் உபதேசிக்கப்பட்ட வன்போல், அச் சமயம்வரை யிருந்த கெட்டபுத்திக ளெல்லாம் மாறி, நல்லறிவேற்பட்டு, அதிக தயையுடன், அக்னியில் விழுந்து கிடக்கும் அப் புறுவைப் பார்த்து மறுபடியும் கூறுவானுயி னன். ஆஹா! எத்தகைய கொடூரமான தீச்செயலை யிழைத்து விட்டேன். இனியும் நான் இப் புவியில் ஜீவித்திருந்தால், எப்பொழுதும் அதிக பாபமே ஸம்பவிக்கும். இதுவரையில் நான் செய்திருக்கும் கர்மாக்களை ஆராயின், என் சரீரம் நடுக்கமுறுகின்றது. இதுகாறும் பிராணிகளை வதம் செய்து வயிறுவளர்த்ததைத்தவிர, எச் சமயத்திலும் நல்லகர்மாவென்கிற வார்த்தையைக்கூட நான் உச்சரித்ததில்லையே! அவ்விதம் செய்யப்பட்ட அநேக பிராணிகளின் வதத்தாலுண்டான பாப சமூகங்களே இச் சரீரவுருவாய் அமைந்திருக்கிறதென்பதில் ஐயமில்லை. ஆ! என்னே!! கஷ்டம். என் செய்வேன்! பாபமே வோர் வுருக்கொண்டதென விளங்கும் இவ் வுடலை அக்னிபகவானும் அங்கீகரிக்கமாட்டாரென்றே தோன்றுகிறது. அன்றியும்,

दत्तस्स्वमांसं दहता कपोतेन महात्मना ।
सोऽहं त्यक्ष्ये प्रियान्प्राणान् पुत्रान्दारान्विसृज्य च ।
उपदिष्टो हि मे धर्मः कपोतेनात्र धर्मिणा ॥
अद्य प्रभृति देहं स्वं सर्वभोगैर्विवर्जितम् ।
यथा स्वल्पं सरो ग्रीष्मे शोषयिष्याम्यहं तथा ॥

பாபியான என் பசியைத் தீர்ப்பதற்குத் தன்மாம்ஸத்தை அர்ப்பணம் செய்யவேண்டி, கபோதமென்கிற இம் மஹாத்மாவால் சரீரம் அக்னியில் விடப்பட்டது. இம் மஹானால் எனக்குத் தர்மோபதேசம் செய்யப்பட்டது. புத்திரன், களத்திரமுதலானவைகளை விட்டுவிட்டுப் பிராணனையும் இழக்கப்போகிறேன். இதுமுதல் சகல போகங்களிலிருந்தும் விலகி இச் சரீரத்தை கிரீஷ்மகாலத்திய தடாகம்போல் சோஷிக்கும்படி செய்யப் போகிறேன். பசி, தாகம், வெயில், காற்று, மழை முதலிய

யாதொன்றையுங் கவனியாமல் பலவித உபவாஸங்களால் பர லோகத்திற்கு வேண்டிய சிரேயஸ்ஸையளிக்கும் சத்கர்மாக்களை அனுஷ்டிக்கப்போகிறேன். அதிதி பூஜனத்திற்காகத் தன் உயிரையுங் கொடுத்த பக்ஷிசிரேஷ்டனான இம்மஹானால் தர்மத்தின் மகிமை நன்கு வெளியிடப்பட்டது. ஆகையால், சகலசிரேயஸ்ஸிற்கும் தர்மமே சிறந்தஸாதனம். இனி அதைத்தான் அனுஷ்டிக்கவேண்டுமென்று தீர்மானித்து, கூட்டிவிருந்த பெண்புறுவையும் திறந்து வெளியே விட்டு, தான் வைத்திருந்த கூடு தடி இவ் விரண்டையும் எறிந்துவிட்டு,

महाप्रस्थानमाश्रित्य प्रययौ संशितव्रतः ।

அதிக நியமத்துடன், மஹாபிரஸ்தான மென்கிற விரதத்தை யனுஷ்டிக்கவேண்டி, அவ்விடம் விட்டுப் புறப்பட்டான்.

(தொடரும்)

மறுபிறப்பு.

(எ0ச-வது பக்கத்தொடர்ச்சி.)

கச. முன்ஜன்மங்கள் அநேகம் உண்டு.

இதற்கு முன்ஜன்மங்களில் மனுஷ்யன் மயில், குரங்கு முதலிய ஜன்மங்களெடுத்து அதிலேற்பட்ட ஸம்ஸ்காரங்களால் அதாவது வாஸனையால் அல்லது பழக்கத்தால் கட்டுப்பட்டிருக்கும்போது மறுபடியும் சுற்றிச்சுழன்று குரங்கு ஜன்மத்தையே அடைவானென்றே வைத்துக்கொள்வோம். இவ்விதம் இப்படி குரங்கு ஜன்மம் இப்போதடைந்தாலும் முன் எடுத்த ஜன்மங்களில் வாஸனை ஓரிடத்திலமிழ்ந்தேகிடக்கும். அதனால் தான் இப்போது குரங்கு ஜன்மத்தை அடைந்தும் அந்தக் குட்டியானது தாய் கிளை கிளையாய்த் தாவி ஓடும்போது தாய்வயிற்றைக் கட்டிக் கொள்ளத்தான் வேண்டுமென்று ஒருவராலும்

உபதேசிக்கப்படாமலும், பழக்கப்படாமலுமே அக்கன்மாவை பிறந்தவுடனே அக்குட்டிசெய்கிறது. இதற்குக் காரண மென்ன? இதற்கு முன் எத்தனையோ தடவை குரங்காய்ப் பிறந்து அங்கு ஏற்பட்ட பழக்கமென்ற வாஸனையானது இப்போது குரங்கு ஜன்மத்தில் வெளியானது என்றார். இதைப் பற்றியும் முன்பே விவரித்திருப்பதால் மேலே செல்வாம். ஆகவே கன்மங்கள் இருக்கிறபரியந்தமும் ஜன்மாவும் விடாதென்பது திண்ணம். இதனால் நமக்சேற்பட்டது யாதெனில் சந்திரமண்டல பரியந்தம் போவதும் அதிலிருந்தும் சுகத்தை அனுபவிப்பதும் அங்கிருந்து கீழே பாய்வதுமே ஜீவனின் கதி என்றாயிற்று. இங்கு சந்திரமண்டலத்திற்குப் புறப்பட்ட கன்மிகளது ஜீவன் அதேகதியால் சந்திரமண்டலம் போகாமல் நடுவழியிலேயே திரும்பி பூமண்டலத்திற்கும் வந்துவிடு மென்றும் சந்திரமண்டலத்தில் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் போதே திடீரெனக் கீழே பாய்ந்து பூமண்டலம் வராமலே சில பாப நரகங்களை அனுபவித்துவிட்டு மறுபடியும் சந்திரமண்டலமே போகலாமென்றும் இப்படி பல தடவையோ ஒருதடவையோ நேரலாமென்றும் பெரியோர் கூறுகின்றனர். இவ்விதமெல்லாமனுபவித்துவிட்டு மறு ஜன்ம மெடுப்பதற்காகத்தான் பூமியில் வருகிறான். அதையே,

पतित्वा मण्डलाच्चेन्दोः ततो नीहारसंयुतः ।
भूत्वा चतुर्विधं भक्ष्यं पुरुषैर्युज्यतेऽन्वशः ॥

சந்திர மண்டலத்தினின்று பனியோடு சேர்ந்து பூமியில் பல விதத்திலும் பதார்த்தமாய் முளைத்து அவன் புருஷர்களால் சாப்பிடப் படுகிறான் என்றார். இதனால் ஸ்திரீ முதலியவர்கள் உட்கொண்டால் பயனில்லை யென்றாயிற்று. இவ்விதம் பயிர் பச்சையில் விழும் ஜீவன் என்னஜன்ம மெடுப்பானோ ஈசனறிவான். இங்கு ஓர் ஆசங்கை நிகழலாம். பிரகதாரண்யகம் நான்காவது அத்தியாயத்தில் அட்டை யென்ற ஜந்துவானது எப்படி முன்னுலிருக்கும் புல்லைப் பிடித்துக் கொண்டு பின்னி

ருக்கும் பிடிப்பை விடுமோ அதுபோல் இந்த ஜீவனும் வேறு ஜன்மத்தைப் பிடித்துக் கொண்டுதான் இந்த ஜன்மத்தை விடுமென்று சொல்லியிருக்கிறதே. அப்படி ஆகும் போது சந்திர மண்டலத்திலிருந்து விழும் ஜீவன் பிறகு என்ன ஜன்மத்தை எடுப்பானோவென்பது எவ்வித மொவ்வுமென்றால் இங்கு ஸமாதானமிது. இவன் அடுத்த ஜன்மத்தைப் பிடித்துக் கொள்வதென்பது மற்ற அநேக சுருதிகளுக்கு விருத்தம். இதைப் பற்றி பகவத்பாதாள் இதே மந்திரத்தின் பாஷ்யத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார். மற்றும்- கீதையில்,

त्रिविधा भवति श्रद्धा देहिनां सा स्वभावजा ।

என்ற சுலோகத்தில் பாஷ்யம்,

स्वभावजा जन्मान्तरकृतः धर्मादिसंस्कारः मरणकाले अभिव्यक्तः स्वभाव उच्यते ।

ஸ்வபாவம் என்றால் ஜன்மாந்திரத்தில் செய்யப் பட்டு மரண காலத்தில் பிரகாசத்தை அடைவது ஸ்வபாவம் அதினின்று முண்டாவது தான் स्वभावज என்று சொல்வதென்றிருக்கிறது ஆகவே மரணகாலத்தில் ஸ்வபாவமென்ற தர்மாதர்ம ஸம்ஸ்காரம் தோன்றுமென்றதனால் அதைத்தான் அட்டை உபமானத்தினாற் காட்டினா ரென்றேற்பட்டது. இங்கு எந்த தர்மாதர்மம் வெளியேறி முன் தோன்றுமென்றால் எது பலமானதாய் இருக்குமோ அதுதான் ஈசனின் கட்டளையினால் முன்னுக்கு வந்து தோன்றும். அந்த நிமிஷத்தில் தான் ஜீவன் உடனே அதை உற்று நோக்கிக் கொண்டே வெளியேறிவிடுவான். அதனால் ஏற்படும் ஸாதகமென்னவென்றால் அந்த ஜீவன் அதிலேயே அமிழ்ந்து கொண்டு பல நரகங்களில் உழன்று சுற்றிவிட்டுப் பிறகு கன்மத்திற்குத் தக்க சரீரலாபமேற்பட்ட பிறகு அது மாறாமலே வந்து கொண்டே இருக்கும். அதாவது ஒரு ஜீவன் மேற்குலத்திற் பிறந்தானென்று வைத்துக் கொள்வோம். அவனுக்கு உத்தம ஜன்மமேற்பட்டிருந்தும் நீசஸ்வபாவம் ஏற்பட்டிருக்கும். அதனாலவன் என்ன சொல்லியும்

திரும்பாமல் கெட்ட ஸகவாஸத்தையும் கெட்ட செய்கையை யும் குலத்திற்கு அவமானத்தையுமே செய்துகொண்டிருப்பான் அவனை திருப்புவது பிரயாஸம். ஆதல் பற்றியே,

स्वभावो नोपदेशेन शक्यते कर्तुमन्यथा ।

ஸ்வபாவத்தை உபதேசத்தினுல் மாற்றுவதற்கு முடியாதென் ருர். ஆகவே ஸ்வபாவத்தைத் தான் மறுஜன்மத்தைப் பிடித்து என்று சொன்னதாய் அறிக. ஆகவே இவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளாய்த்தான் ஜீவன் பூலோகத்திற்கு வருகிருனென்ருயிற்று. இனி இதை வளர்ப்பானேன். பூமியிலிறங்கிய ஜீவன் புற்பூண்டு களாய் ஆவதையும் பிறகு அது ஏறும்படியையும் கவனிப்பாம்.

15- ஜீவன் புற்பூண்டாய் ஆவான்.

பூலோகத்தில் விழும் ஜீவன் புற்பூண்டாய்ப்பிறப்பானென்று சுருதி கூறுகின்றது. இப்படிப் பிறக்கும் ஜீவன் அப்புற்பூண்டு சரீரத்திற்கேற்பட்ட சுகதுக்கத்தை அடைந்து கொண்டு கஷ் டப்படுவானு. அவன் ஜன்மத்தை விட்டு எப்போது விலகு வான், என்ருல், இதைத்தான்

अन्याधिष्ठितेषु पूर्ववदभिलापात् ।

என்ற அதிகரணத்தில் பாஷ்பகாரர் நன்கு விவரித்திருக்கிருர். அவ்வபிப்பிராயத்தையே நானும் இங்கு வெளியிடுகிறேன். அதாவது இப்புற்பூண்டாய்ப் பிறப்பானென்ருல் அதாகவே அவன் பிறப்பதல்ல. மற்றேவெனில் புற்பூண்டாய் இருக்கும் செடி கொடியில் அமர்ந்திருப்பான். வஸிப்பவன் என்று அர் த்தம். ஆனுல் எள்ளும் கொள்ளுமாய்ப் பிறப்பானென்று சுருதி யிருக்கிறதே யென்ருல் பாதகமில்லை. வஸிப்பானென்று தான் அதற்கு அர்த்தம் கூறுவோம். ஏனெனில் இப்படித் தான் முன்னும் சந்திரமண்டலத்திலிருந்து இறங்கும் ஜீவன் மேகமாய் ஆகிருன். வாயுவாய் ஆகிருனென்றவிடத்து மேகமா

யும் வாயுவாயும் ஆய்விடுகிறதில்லை. அங்கு ஸூக்ஷ்மமாய் இருப்பதனுல் அப்படியாகிருனென்று சொன்னதே தவிற வேறல்லவென்று எப்படிக் கூறினேமோ அதுபோல் தான் இங்கும் எள்ளும் கொள்ளுமாய் ஆகிருனென்ருல் அங்கு உட்கார்கிருனென்று சொன்னேம். அவ்விதமாகவே பிறக்கிருனென்று சொல்லாவிட்டால் என்னவென்ருல் அப்போது ஒருநாளும் மேல் ஜன்மத்தை ஒருவரும் அடையப் போகிறதில்லை. எல்லோரும் புற்பூண்டு மரம் செடி கொடி ஜன்மமாய்த் தானிருக்க வேண்டும் ஏனெனில் பாருங்கள். புற்பூண்டாகவே பிறந்தால் அதை ஒரு ஜந்து சாப்பிட ஆரம்பிக்கும் போது அதிலுள்ள ஜீவகலை போய் மாமிசம் தின்பவனும் ஜந்துவைக் கொன்றுதான் தின்கிருன். உயிருடனிருப்பதை அப்படியே விழுங்கிய போதிலும் அதன் உயிர் வயிற்றுக்குள் போன பிறகாவது போய்விடுமென்பது நிச்சயம். அப்படி எள்ளு கொள்ளு முதலிய தானியத்தைக் குத்தும்போதும் பக்குவம் செய்யும்போதும் அதற்கு முன்னுல் செடியை வெட்டும்போதுமே அங்கிருக்கும் ஜீவன் போய்விடுமென்பதிலையமுண்டோ. ஐயமுண்டென்ருல் இதை கவனிக்க சாந்தோக்யம் 6 வது அத்தியாயம் 11 வது காண்டத்தில் இப்பெரிய மரத்தின் ஒருகிளையை வெட்டினுல் ஜீவன் அங்கிருந்து வெளியேறிவிடுவான் என்றெல்லாமிருக்கிறது. ஆகவே ஜீவன் வெளியேறி விட்டால் அந்தப் பதார்த்தத்தைத் தின்கின்ற மனிதனிடமிருந்து ஜனன மெடுக்க ஜீவகலை யேது. மிருக சரீரம் பக்ஷி முதலிய சரீரம் கூட எடுக்காது. ஜீவன் அல்லவா முளைக்கவேண்டும். ஜீவனில்லாததையே தின்கிறவனிடமிருந்து பீஜசக்தி ஏற்படாதென்பது நிச்சயம். ஆகவே சந்திரமண்டலத்திலிருந்து இறங்கும் ஜீவன் செடி கொடிகளில் உட்கார்வான் என்ருயிற்று. இதனுல் நமக்குக் கிடைத்த தென்னவென்ருல் ஒரு வீட்டில் அபிமானி ஒருவன் தங்குபவனெருவன் இருந்தால் அபிமானியாயிருப்பவன் வீட்டிற்கு கேடு நேர்ந்தால் வருந்துவான் பரிகாரம் தேடுவான் மற்றும் கஷ்டமடைவான். தங்குபவனுக்கோ வெனில் ஒன்றுமில்லை. வீடு

ருந்தாலென்ன இடிந்தாலென்ன. இரண்டுமொன்றே. அது போல்அனுசயியான ஜீவன்ஒட்டிக்கொண்டுமட்டி லுமிருப்பான் அதை வெட்டினுலும் வேகவைத்தாலும் வருந்தமாட்டான். ஆனல் அதிலேயே ஒட்டினற்போலிருந்து கொண்டு அதைச் சாப்பிடும் பிராணிகளது வயிற்றுக்குள்ளும் போய் ரேதோரூபமாய் மாறுவான். அப்போதுதான் மனுஷ்யன் முதலிய ஜன்மத்தை அடைவான். இதனுல் செடி கொடிகளாய்ப் பிறந்திருப்பது ஓர் நாரகியான ஜீவனென்பதை நன்கறிய வேண்டும் அது மூன்ருவது மார்க்கத்தில்சென்று யாம்யயாதனையிற் செல்வதென்றும் தெரிந்து கொள்ளுங்கள். அச்சீவன் அச் செடி கொடி வெட்டப்படும் போதே போய்விடும். இப்படிச் செடி கொடிகளில் ஏற்றத் தாழ்ச்சியாய் விழுவதும் உத்தமாதமர்களான பிராணிகளால் புசிக்கப்படுவதும் அவனது கன்மபலத்தின் ஏற்றத் தாழ்ச்சியைப் பொருத்தது. இப்படிக் கொண்டிருக்கும் ஜீவகலை யுளள பதார்த்தத்தை சாப்பிடுகிற மனிதன் கர்ப்பத்தை அடைவான். இனி அதை விசாரிப்பாம். சுபம்!

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

இராஜகீயமும் மதமும்.

(பாரதீபுத்திரன் எழுதுகிருர்.)

சில வருஷங்களாக காங்கிரஸ் மஹா ஸபையானது இராஜகீயமல்லாததும், மதவிஷயங்களைப்பாதிக்கக்கூடியனவாயுமுள்ள சில தீர்மானங்களைச் செய்துவருகிறது. நாளையதினம் ஆந்திர தேசத்திலுள்ள காகிடை என்னும் ஸ்தலத்தில் காங்கிரஸ் மஹாஸபை கூடுகின்றது. அவ்விடம் தேசாபிமானிகள் பலர் கூடுகிருர்கள். அதுஸமயம் ஆலோசிக்கப்படப் போகும் விஷயங்களில் “ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை” என்பது முக்கியமானது.

இது ஸம்பந்தமாய் நமது தேசத்தில் ஒற்றுமை ஏற்பட வேண்டியது அத்யாவச்யமாகும். ஏனென்றால், பல மதங்கள் நிறைந்த ஒரு தேசத்தில், ஒரு மதம் மற்றொரு மதத்தின் பாத்தியங்களை அபகரிக்கவோ, அல்லது மற்றொரு மதத்தினரின் மனதைப் புண்படுத்தக் கூடியதான காரியங்களைச் செய்யவோ, யத்தனித்தால், அது ஸமயத்தில் விபரீதமான குழப்பங்களை தேசத்தில் ஏற்படுத்திவிடுமென்பது, யாவரும் அறிந்த விஷயம்.

இம்மாதிரியான குழப்பங்கள் ஏற்படாமல் தேசம் முழுவதும் அமைதி ஏற்படவேண்டுமானால், மஹா ஜனங்கள் தங்களுடைய முழு மனதுடன் தேசத்தின் ஸமாதானத்தை நிலைநிறுத்த வேண்டி, ஒற்றுமைப்பட் டிருக்கவேண்டுமே யல்லாமல், ஏதோ சில நிர்ப்பந்தமான வரையறைகளை ஏற்படுத்தி, அவைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்று தீர்மானங்களைச் செய்வது அவ்வளவு யுக்தமாகாதென்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறது.

ஒரு மதத்தின் உரிமைகளை அபகரிப்பதானது, ஓர் பதிவிரதையின் கற்பை யழிப்பதுபோலாகும். அவ்விதமே மதாபிமானிகளும் எண்ணுவார்கள்.

பஞ்சாப் வாசிகளான லாலா லஜபதிராயும், Dr. அன்ஸாரியும் இது ஸம்பந்தமான சில தீர்மானங்களை வெளியிட்டுள்ளார்கள். அத் தீர்மானங்களில் கோஹத்தியைப்பற்றியும், மத ஸம்பந்தமான ஊர்வலங்களைப்பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. இத் தீர்மானங்களால் சில ஸமயங்களில் இரு மதத்தினரும் தங்களுடைய உரிமைகளை சில சமயங்களில் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

வங்காளத்தில் ஸ்ரீமான் தாஸரும் இவ்விதமான தீர்மானம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அத் தீர்மானம் ஹிந்து மதத்திற்கே கெடுதல் விளைவிக்கக்கூடியதாக விருக்கிறது, என்பதாக கல்கத்தா ஹிந்துஸபையார் ஒருதீர்மானம் செய்திருக்கிறார்கள்.

சென்ற 23-12-23 ல் கல்கத்தாவில் தர்பங்கா மஹாராஜா அவர்களும், பிரஸித்தரான விபினசந்திர பாலரும் ஒரு பெரிய மஹாநாட்டில் மேற்கண்ட தீர்மானங்கள் ஹிந்து மதத்தின் அஸ்திவாரத்தையே தாக்கக்கூடியதாக விருக்கிறதென்பதாகச் சொல்லிப் பலமாய்க் கண்டித்திருக்கிறார்கள். பண்டித மதன் மோஹன மாளவியா அவர்களும், இவ்விஷயம் தற்காலம் காங்கிரஸில் ஆலோசிக்கப்படக்கூடாதென்று சொல்லியிருக்கிறார்.

ஐக்ய மாகாணத்தி லுள்ளதும், ஹிந்து மதத்திற்கே புராதன ஸ்தலமாயுள்ளதுமான காசியிலும் இத் தீர்மானங்களை மஹாஜனங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பம்பாயிலும் இதுவிஷயமாய் அநேக விதமான ஆக்ஷேபணைகள் இருந்து வருகின்றன.

ஆகையால், வட இந்தியா முழுவதிலுமே மஹாஜனங்களுக்கு ஸம்மதமில்லாத ஒருவிஷயத்தை காங்கிரஸ்மஹாஸபை ஆலோசிக்கவேண்டுவது, அவ்வளவு அவசியமா? என்பதுதான் இராஜீய வாதிகள் இப்பொழுது ஆலோசிக்க வேண்டியிருக்கிறது.

இவ்விஷயத்தில் காங்கிரஸின் தீர்மானத்தையும் மஹாஜனங்களின் நோக்கத்தையும் பின் ஸஞ்சிகைகளில் எழுதுகிறேன்.

மதுரையில் வாஜபேய யாகம்.

உத்தமமான இந்த ஹாலாஸ்ய க்ஷேத்திரத்தின் கண் வேகவதி என்னும் வைகை நதிக்கரையில் நாளது ருதிரோத்காரி வருடம் கார்த்திகை மாதம் 23 ம் தேதி சுக்லபக்ஷம் பிரதமா திதி யோடு கூடிய சுபதினத்தில் தஞ்சை ஜில்லா தண்டான் கோரை கிராமவாஸிகளான பிரம்மஸ்ரீ அப்பாத்துரைதீக்ஷிதாவர்கள் வாஜபேய யக்ஞத்திற்கு ஸங்கற்பம் செய்து நிர்விக்னமாய்

உத்தமோத்தமமான மேற்படி கன்மாவை மார்கழி மாதம் 5ம் தேதி குருவாரத்தன்றோடு அவபிருதஸ்னானம் செய்து முடித்தார்கள். தீக்ஷிதரவர்கள் இதற்கு முன் அனேக யக்ஞம் செய்தவர்கள் இந்த யக்ஞத்தையும் செய்ய வேண்டுமென்று கருதியவர்களாய் அதற்காக ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியாகிய ஜகத்குருவின் ஸன்னிதான மடைந்து வணங்கித் தமது கோரிக்கையைத்தெரிவித்துக்கொண்டதில் அது நிர்விக்னமாய் நடந்தேறுமென்று பூரணானுக்கிரகம் செய்து ஸ்ரீமுகமும் அனுக்கிரகித்து இந்தஉத்ததமான க்ரதுவை ஹாலாஸ்ய க்ஷேத்திரத்திற் செய்தால் லோக க்ஷேமமாயும் நிர்விக்னமாயும் நடைபெறலாமென்று மனுக்கிரகித்ததன் பேரிலேயே இந்த க்ஷேத்திரத்திற்கு வந்ததாய் தீக்ஷிதரவர்கள் சொல்லிக் கொண்டனர். அப்படியாயினும் இவர்கள் அநேக ஆஸ்திகர்களிடத்தில் கண்டு அவகாசத்துடன் தெரிவித்துக் கொள்ளும்படியான ஸவகாசம் வைத்துக் கொள்ளாமல் வைதிக கோஷ்டியிற் கூட நிச்சயமாய் நடத்தக் கூடு மென்ற நிஷ்கர்ஷை தெரியாமலும் இருக்கும்படி அவ்வளவு சீக்கிரமாய் கர்மாவை ஆரம்பித்தனர். அவ்விதம் ஆரம்பித்து சாஸ்திரப்படியும் ஸன்னிதானத்தின் ஆக்ஞைப்படியும் மூன்று நாள் தீக்ஷாநியமம் பெற்றனர். ஆனால்

आ परितोषाद्विदुषां न साधु मन्ये प्रयोगविज्ञानम् ।

என்ற நியாயப்படி தீக்ஷிதரவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இங்குள்ள மஹாஜனங்களுக்கும் இது எவ்விதமாய் முடிவடையுமோ வென்ற கவலை மேலிட்டது. பலர் பலவிதம் சொல்வதென்பது சாதாரணக் காரியங்களிலேயே ஏற்படும் போது மகா பெரிதாயுமிருக்கிற இத்தகைய ஸௌதகர்மாவில் இனியவார்த்தை சொல்லி மகிழ்வதென்பதைக் காட்டிலும் அபவாதத்துடன் திட்டுபவர்கள் அதிக மென்பது இயற்கையே. தீக்ஷிதரவர்கள் இக்கார்யத்தில் செய்து கொண்ட ஒருகாரியம் மட்டிலும் அவர்களுக்கு மனதில் ஒருவாறு தேறுதலைச் செய்திருக்கும். அதாவது இந்த யக்ஞத்தில் ரித்விக்கு

களாகத் தன்னைச் சேர்ந்த நெருங்கிய பந்துக்களே வரிக்கப் பட்டிருந்தனர். அதனால் இந்த க்ஷேத்திரத்தில் ஆஸ்திகர் அதிகமாய் சௌகர்யம் செய்யாவிடினும் ஏதோ இதற்கென்று ஸ்ரீமகாஸன்னிதானத்தில் அனுக்கிரகித்தபொருளையும் இன்னும் ஸங்கிரகம் செய்யப்பட்ட பொருளைக் கொண்டும் அவர்களுக்கு இயன்றவளவு தக்ஷிணையைக் கொடுத்தாலும் சரிதார்த்தம் தான் என்று எண்ணினார்கள் போலும். ஆனால் அவ்வெண்ணப் படி தான் நடை பெறுமென்று யாவரும் நினைத்திருந்தாலும் மகாஸன்னிதான ஆக்ஞை என்று சொல்லிக் கொண்டு இந்த க்ஷேத்திரத்திலாரம்பித்ததால் அது வீணாகுமா. யாகம் 23 ம் தேதி சனிக்கிழமை ஆரம்பம். வெள்ளிக்கிழமை யன்று ரித்விக்குகளுக்கு தக்ஷிணை கொடுக்கவேண்டிய கட்டம் ஒன்று. அச்சமயம்

भेकैः कोटरशायिभिः मृतमिव क्ष्मान्तर्गतं कच्छपैः
पाठीनैः पृथुपङ्कपीठलुठितैः यस्मिन्मुहुर्मूर्च्छितम् ।
तस्मिन्शुष्कसरस्यकालजलदेनागत्य तच्चेष्टितं
यत्राकुम्भनिमग्नवन्यकरिणां यूथैः पयः पीयते ॥

எக்குளத்தில் ஜலம் வறண்டு விட்டதால் வளைகளில் இருக்கும் தவளைகள் இறந்தன போலும் ஆமைகள் பூமிக்குள்ளும் மீன்களால் சேற்றில் புரண்டும் வஸிக்கப் பட்டனவோ. அக்குளத்தில் எதிர் பாராமலே மேகம் கூடி அக்கார்யத்தைச் செய்தது எதனால் அக்குளத்தில் கழுத்துவரை அமிழ்ந்து கொண்டு காட்டு யானையின் கூட்டங்கள் நீரருந்தினவோ என்ற நியாயப்படி ஆஸ்திகோத்தமரான ஸ்ரீமான் N. நடேசய்யர் என்ற பிரபுவானவர் ஒருவரும் எதிர்பாராதபடி அங்கு ஏற்பட்ட ரித்விக்குகள் பதினெட்டுப் பெயர்கள், ஒவ்வொருவருக்கும் ஒன்றே முக்கால் பவுன் வீதம் தக்ஷிணை கொடுத்து ஸ்வர்ணமாரி பொழிந்தனர். அச்சமயம் அந்தப் பிரபுவைப் பற்றியும், ஈகையைப் பற்றியும், 1000 கணக்காய்க் கூடியிருந்த மகாஜனங்கள் எவ்

விதம் கொண்டாடி யிருப்பார்களென்பதைப் பத்திரிகையிலெ ழுதி முடியுமா வென்பதைப் படிப்பவர்களே அறிந்து கொள் ளலாம்.

यद्ददासि यदश्नाति तदेव धनिनो धनम् ।

என்ற நியாயப்படி இவ்வுத்தம கன்மாவில் வினியோகம் செய்த இந்தப் பிரபுவின் தனமேதனம் என்று யார்தான் சொல்ல மாட்டார். இவ்விதம் அன்று தக்ஷிணையளித்து அன்று அக் கன்மாவின் அங்கமாய் நடந்த அவபிருத ஸ்னானபரியந்தம் கூட இருந்து நடத்தி தீக்ஷிததம்பதிகளை அழகிய மோட்டார் வாகனத்தில் வீற்றிருக்கச் செய்து வாத்திய கோஷங்களுடன் ஊர்வல வைபவத்தையும் நடத்தி வைத்தனர். அது முதல் முடியும் மட்டும் யாகசாலையிலேயே இருந்து கொண்டும் தனது ஸ்னேகிதர்களான லௌகிக-பிரபுக்கள் மூலமும் திரவிய சேகரம் செய்து விமரிசையாய் நடத்த ஆரம்பிக்கவே ஏழைகள் முதல் தம்மாலியன்றவளவு பணத்தையும் அரிசியையும் கொடுத்து தவ ஆரம்பித்தனர். ஸ்ரீமான் அய்யரவர்களும் இவ்விஷயத் தில் ரூபாய் 500 க்குக் குறையாமல் உபயோகித்தன ரென் பதைக் காட்டிலும் ஆலஸ்ய மில்லாமல் யாகசாலையிலேயே வீற்றிருந்ததனால் அக்கன்மாவுக்குக் குறைவே ஏற்படவில்லை என்று சொல்வது உத்தமம். ஆகவே கடைசியாகப் பார்த் தால் குருமூர்த்தியின் கருணை உண்மையாய் ஏற்பட்டால் யா தொரு குறையும் எவருக்குமேற்படா தென்பதற்கு இது ஒரு முக்கியமான பாடம். இதனால் யஜமானரான தீக்ஷிதரவர்கள் மனது குளிர்ந்தது மட்டிலுமல்ல. உலகத்திற்கே ஸுபிக்ஷமான விருஷ்டி ஏற்பட்டுக் குளிர்ச்சி செய்ததென்பது வெளிப்படை. இதில் வெளியிலிருப்பவர்கள் யாகத்தைப் பற்றி நிந்தனையாய் பேசிய போதிலும் அங்கு வந்து பார்ப்போமென்று வந்தவர் களுக்கும் ஆஸ்திக்ய மேற்பட்டுப் பலரிடம் அவர்களே ஸமா தானம் சொல்லக் கடமைப் பட்டவர்களாய் ஆய்விட்டார் களென்பதும் குறிப்பிடத்தக்கது. யாகமத்தியில் இடை

இடையே அநேக பன்டிதர்களால் யாகத்தின் முக்கிய நோக்கத்தைப்பற்றியும் அஹிம்ஸை தான் என்பதையும் சாஸ்திர பூர்வமாய் உபன்யஸித்து கேட்போரின் மனதைப் பிரமிக்கச் செய்தனர். இவ்வரிய பெரிய கன்மாவை தரிசிக்க அநேக ஜனங்கள் கிராமாந்தரங்களினின்றும் வந்திருந்தனர். தீக்ஷிதரவர்களுக்கு இவ்வூரில் நடந்தவிமரிசைபோல் இதற்கு முன் நடந்திரா தென்பதை அவர்களே ஒப்புக்கொண்டனர். அதிகமாய் வளர்ப்பானேன். நான் முன் சொன்ன சுலோகப்படி அவர்கள் மனதில் நினையாதபடி அவ்வளவு திரவியமும் வஸ்திராதிகளும் வந்தன வென்பதற்கு குரு கருணையே காரண மென்பேன். இவ்விதம் ஆங்காங்கு ஆஸ்திகர்களான வைதிகர்கள் சிரௌத கர்மாவை நடத்தினுல் நம் நாடு மேன்மை பெற்று வழங்கும் என்பதைச் சொல்லி நிறுத்துகிறேன். சுபம்!

M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

குறிப்பு:—மிகவும் கொடிய கலியின் விலாஸத்தினுல் தர்மா தர்மங்களின் நிலையை மாறி பலரால் பலவிதம் கூறப்படுமிக் காலத்தில் வைதிக கர்மாக்களுள் மிகச்சிறந்ததான இவ்வித வேள்வியை விதிவழுவாது உத்தமக்ஷேத்திரத்தின்கண் ஒருவர் நடத்தி அதனுல் நல்ல விருஷ்டியுமேற்பட்டுத் தேசக்ஷேமமுண்டானுல் நம் வைதிககர்மாக்களுக்கிருக்கும் மஹிமையை இதினின்றும் நன்குதெரிந்து கொள்வார்களென்று நினைக்கிறேன். மேலும் முன்காலத்தில் மஹாராஜாக்கள் அந்தணர்களுக்குத் தர்மகைங்கர்யத்திற்கு வேண்டிய நன்கொடையளித்தனரென புராணங்களில் கூறியிருப்பதை கதையென்று சங்கிக்கும் சிலருக்கு பிரம்மஸ்ரீ நடேசய்யரவர்கள் பிரத்தியக்ஷத்தில் நடத்தி அச்சங்கையை விலக்கினுரெனக் கேட்க யார்தான் ஸந்தோஷப் படமாட்டார்கள். இம்மஹானுக்கு மேன்மேலும் ஐசுவரியப் பெருக்கையும் வைதிகமார்க்கத்தில்சிரத்தையையும் ஸ்ரீமீனுக்ஷி சுந்தரேச்வரர்கள் அளிக்குமாறு பிரார்த்திக்கிறேம்.

சரணமடைந்தோரைப் பாதுகாப்பதே சிறந்த தர்மம். எசுக

கொடுக்கும் பர்த்தாவை எவள்தான் பூஜிக்கமாட்டாள்? ஸ்திரீகளுக்குப் பர்த்தாவைப்போன்ற ரக்ஷகர் ஒருவருமில்லை. ஆகையால் ஸ்திரீகளுக்குப் பதி தான் எப்பொழுதும் சரணம். ஹே! பிரிய! தாங்களன்றியில் ஜீவித்திருப்பதில் எனக்குத் திருப்தியில்லை. பதிவிரதா தர்மத்தை பூஷணமாகக்கொண்ட எந்த ஸ்திரீதான் பதியிழந்தபின் ஜீவிக்க விரும்புவாள்? என்று கற்களும் கரையும்படி பலவாறாய்ப் புலம்பியழுது, மிகுந்த துக்கத்துடன் அருகில் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் அக்னியில் பிரவேசித்து தன் பதியை யடைந்தது. உடனே முன்போன ஆண் புறாவானது விசித்திரமான ஆபரணங்களாலும், சிறந்த புஷ்பமாலைகளாலும் அலங்கிருதமாயும், புண்யசாலிகளான மஹாத்மாக்களால் பூஜிக்கப்பட்டதாய், சரணாகதரக்ஷணமென்கிற தன் புண்யகர்மாவால் விமானத்திலேறிக்கொண்டு பலகோடி விமானங்களால் சூழப்பட்ட ஸ்வர்க்கலோகத்தை யடைந்து அங்கு பூஜிக்கப்பட்டதாய்க் கொண்டு தன் பார்யையோடு சுகமாய் வாழ்ந்தது.

இவ் வுபாக்கியானத்தால் சரணாகதரக்ஷணமென்னும் தர்மத்தை அவசிய மனுஷ்டிக்கவேண்டுமென்றும், அதனாலுண்டாகும் பயன் முக்கியமாய் மோக்ஷமென்னும் பரமபுருஷார்த்தம் வெளியாவதோடுகூட மற்றும் சில ஸூக்ஷ்ம தர்மங்களும் போதிக்கப்படுகின்றன. அவையாவன்:— உத்தமகுணமுடைய பார்யையாயிருப்பின், அவளுடைய வியோகத்தால் கஷ்டமுண்டாகுமென்றும், ஸ்திரீகள் எத்தகைய ஆபத்துக்காலத்திலும் தன்பர்த்தாவாயிருப்பினும், அவனுக்கிருக்கும் அவிவேகத்தை மாற்றக்கூடிய சாஸ்திரீயமான தர்மோபதேசத்தைச் செய்யவேண்டுமென்றும், அவ்விதம் செய்யப்படும் உபதேசத்தை பதியாயிருந்தாலும் நமக்கு ஸ்திரீஜாதியாயிருக்குமிவள் உபதேசம் செய்யவாவதென்கிற அகங்காரங்கொண்டு அதை மறுக்காமல்

युक्तियुक्तं वचो ग्राह्यं बालादपि शुकादपि ।

தர்ம விரோதமில்லாததும், யுக்திக்குப் பொருத்தமாயுமிருக்கும் வார்த்தைகளை எவர்கள் கூறினும் தள்ளாமல் கிரகிக்கவேண்டுமென்கிற சான்றோர் கொள்கையைக் கடைப்பிடித்து அவ்வுபதேசத்தைப்பெற்றும், அவ்வாறே அனுஷ்டிக்கவேண்டுமென்றும், தன்னைச் சரணாகதியடைந்தவொருவனைப் பாதுகாப்பதின் பொருட்டு தன் ஜீவன்வரையிலுள்ள எவ்வித வஸ்துக்களையும் சந்தோஷமாய் விடத்தயாராயிருக்கவேண்டுமென்றும், எவ்வித பாபச்செயலைச் செய்பவனுக்கும் தர்மநெறிகளில் செல்லும் பிராணிகளின் சேர்க்கையால் புத்திமாறி பரலோகத்திற்குரிய சிறந்த மார்க்கத்தில் செல்லுமென்றும், பதிவிரதா ஸ்திரீகள் பதியையிழந்தபின் ஜீவித்திருப்பது மிகவும் கஷ்டமென்றும், பர்த்தாவின் சுகதுக்கங்களைத் தாங்களும் அநுஸரிக்கக் கடமைப்பட்டவர்களென்றும், நன்கு வெளியாகின்றன.

ஆகையால் இதிற்கூறப்பட்ட தர்மங்களை அவரவர்களும் சக்திக்கியன்றமட்டில் கைவிடாமல் அனுஷ்டித்து இருதார்த்தராகவேணுமாய்த் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீ மஹாபாரத விராடபர்வ உத்தரா விவாஹ மஹோத்ஸவம்.

சுமார் ஒருமாதகாலத்திற்கு முன்னர், நம் பிரதேசங்களில் மாரியின்மையால் நேரிட்ட கஷ்டங்களால் வருந்துவதையறிந்து அதை நிவர்த்திக்கவேண்டி, லோகக்ஷேமார்த்தமாயவதரித்த, கருணைக்கடலான ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள், மத்திய ராஷ்டிரமான. கும்பகோணநகரின்கண் விளங்கும் ஸ்ரீமடத்தில், மஹாபாரதம் விராடபர்வம் உபக்கிரமித்துக் கிரமமாய்ப்படனம் செய்து, ஸமாப்தி செய்யவேண்டுமென்று ஆக்ஞாபித்ததின் பேரில், அவ்வாக்ஞையை ஆதரவுடனும், ஆனந்தத்துடனும்,

அங்கீகரித்த இந்நகரில்விளங்கும், பாரதஸிம்மம் கபே. இராமச்சந்திராசாரியாவர்கள் சென்ற கார்த்திகைமீ 13உ (28-11-23) யில் உபக்ரமம்செய்து பண்டிதர்முதல் பாமரர்வரையிலும் சகலஜனங்களும் சந்தோஷிக்கும்படி, ஒவ்வொருதினமும் மாலை 6½ மணிமுதல் 8 மணி வரையிலும் முறையே படித்து, அதன் கருத்தை எளிய தமிழ்நடையில் நன்குபன்னியஸித்து வந்தார்கள்.

டிசம்பர்மீ 23உ ஆதிவாரத்தன்று கிரந்த ஸமாப்தியும் உத்தரா விவாஹ மஹோத்ஸவமும் நடைபெற்றது. அன்றைய தினம் முன்னமேயே தெரிவித்திருந்தபடி இவ்வூரிலுள்ள அநேக ஆஸ்திகஜனங்களும் ராவ்பஹதூர் பிர்மஸ்ரீ S. அப்புசாஸ்திரிகளவர்களும், ஸ்ரீமடம் முக்கிய அதிகாரிகளும், ஆஸ்தான வித்வான்களும் வந்திருந்தார்கள். பிரம்மஸ்ரீ ஆசார்யாவர்கள் ஆதிவாரத்தன்று மாலை 6 மணிக்கு வழக்கம்போல் உபந்நியஸிக்கத் தொடங்குமுன், ஸ்ரீ ஜகத்குரு மஹாஸ்வாமிகளுடைய ஆக்ஞைப்படி இந்தமடத்தில் புண்யசரிதமான ஸ்ரீவிராடபர்வத்தைப் படிக்கும்படியானபாக்கியம் பெற்றதனால், தன்யனானேனென்று கூறி; பிறகு ஸ்ரீ ஜகத்குரு அவர்களுடைய ஞானவலிமையையும், வித்வான்களிடமிருக்கும் அபிமானத்தையும், லோகக்ஷேமகரங்களான காரியத்தில் அவர்களுக்கிருக்கும் ஊக்கத்தையும் நன்கு எடுத்து போதித்தார். பிறகு ஸ்ரீ விராடபர்வத்தை உபக்ரமித்து மிகவும் தெளிவான பிரவசனங்களினால் சபையிலுள்ளோர்களுக்கு விசேஷ திருப்தியை யுண்டுபண்ணி, கிரமமாய் உத்தராவிவாகத்தையும் பூர்த்திசெய்தார்கள். பின்னர், ஸ்ரீமடம் வித்வான் கவிரத்னம் பிரும்மஸ்ரீ மஹோபதேசக பஞ்சாபகேச சாஸ்திரிகளும் ராவ்பகதூர் S. அப்புசாஸ்திரிகளவர்களும்பிர்மஸ்ரீ ஆசார்யாளுக்கு நம் புராணகிரந்தங்களிலிருக்கும் பக்தியையும், அவைகளின் கருத்தையெடுத்து நன்குபோதிக்கும் திறமையையும் நமது கிரந்தங்களுக்குள்ள மஹிமைகளையும்பற்றி சற்றுநேரம் உபந்நியஸித்தார்கள். பிறகு மேளதாளத்துடன் ஸந்நிதியில் விளங்கும் பகவன்மூர்த்திகளுக்கு தீபாராதனம் செய்யப்பட்

டது. உடனே காபே. ஸ்ரீ இராமச்சந்திராசார்யரவர்களுக்கு பிரம்மஸ்ரீ அப்புசாஸ்திரிகளவர்கள், ஸ்ரீ ஜகத்குரு ஸந்நிதியிலிருந்து வந்திருந்த ஸால்வை, ஸாவான் முதலான பிரஸாதங்களைக் கொடுத்தார்கள். பிறகு உள்ளூர் மஹாஜனங்களுடைய மரியாதைகளும் நடத்தப்பட்டன. சந்தனம், புஷ்பம், தாம்பூலம் வழங்கியபின்னர், ஸபை கலைந்தது.

ஓர் ஆஸ்திகாபிமானி.

மறுபிறப்பு.

(எஙஉ-வது பக்கத்தொடர்ச்சி.)

கசுவது மனிதன் கர்ப்பமடைவான்.

இத்தலைப் பெயரைப் பார்க்கும்போதே எல்லோரும் ஆச்சரியமடைவார்கள். ஆனாலும் ஆச்சரியத்துடனேயே மேலும் செல்வோம். புருஷன்தான் முதலில் கர்ப்பமடைவான். அதெவ்விதமெனில் கீழ்க் கூறப்பட்ட சுருதிகளின்படி புருஷனது அன்னத்தில்தான் பிரவேசிக்கிறதென்றேற்படவில்லையா. அதனால் கர்ப்பமென்று சொல்ல வேண்டுமோ வென்றால் சொல்லத்தான் வேண்டும். ஏனெனில் வைத்திய சாஸ்திரப்படி இன்று நாம் புசிக்கும் அன்னமானது இதிலிருந்து 15 ம் நாளில்தான் சுக்லஸ்தானத்தை அடைகிறதென்றும் ஒருமாதம் கழித்துதான் சுக்லமாகிறதென்றும் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சுக்லம் ஸ்திரீ என்ற ஐந்தாவது ஆஹுதியில் ஹோம ரூபமாய் பிரவேசிக்கிறது. அப்படிப் பிரவேசிக்கு முன் அந்த சுக்ல ரூபமான ஜலமய ஜீவன் 2 மாதம் புருஷனது சரீரத்தில் ஸம்ஸ்காரமடைகிறதென்றும் சொல்லப் படுகிறது. இதையே சுருதியிலும் ஒவ்வொரு அங்கத்தினின்றும் உண்டாகிறாய். ஹிருதயத்திலிருந்து உண்டாகிறாய் என்றது. ஒவ்வொரு அங்கத்தி